RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 28 | பிப்ரவரி.4 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5







# தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 50 ஏக்கரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம்!

தஞ்சாவூர்: பிப்.4-

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில், 50 ஏக்கரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சாவூரில் ராஜராஜ சோழனையும், அவரது ஆட்சி நிர்வாகத்தையும் பெருமைப்படுத்தும் வகையில், மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என 2023ம் ஆண்டு மார்ச் 20ம் தேதி சட்டப் பேரவையில், முதல்வர்ஸ்டாலின் அறிவித்தார்.

இதையடுத்து தஞ்சாவூரில் அருங்காட்சியகம் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றது. அப்போது பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் அருகே உள்ள காலியிடம் உட்பட 5 இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.



இதையடுத்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ. சாமிநாதன் ஆகியோர் தஞ்சாவூருக்கு வருகை தந்து, இடங்களை பார்வையிட்டு சென்றனர். ஆனால் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் கடந்த டிசம்பர் மாதம் இறுதியில் சோழர் அருங்காட்சியகம் கட்டுவதற்கான டெண்டர் வெளியிடப்பட்டது. அப்போது தமிழ்நாடு நுகர் பெபருள் வாணிப கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம் அருகே தேர்வு செய்யப்பட்ட 12 ஏக்கர் இடம் போதாது என தெரிவிக்கப்பட்டது.

ரூ.56.41 கோடி மதிப்பில்...

எனவே, தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் 50 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு ரூ.56.41 கோடி மதிப்பில் அருங்காட்சியகமும், 125 அடி உயரத்தில் மாமன்னன் ராஜராஜசோழன் சிலையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விரைவில் இதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறவுள்ளது. குஜராத்தில் சர்தார் வல்லபபாய் படேலுக்கு அமைக்கப் பட்ட சிலை போன்று, ராஜராஜ சோழன் சிலையை வடிவமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என வரலாற்று ஆர்வலர்கள் தெரிவித்தனர்.




## இரத்தப் புற்றுநோய்க்கு இலக்கு சிகிச்சை குழந்தைகள், முதியவர்களுக்கு புதிய நம்பிக்கை

### மீனாட்சி மிஷன் மருத்துவர்கள் தகவல்

மதுரை, பிப்.4

இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் முதிய நோயாளிகளுக்கு, ஆரோக்கியமான செல்களை பாதிக்காமல் புற்றுநோய் செல்களை மட்டும் அழிக்கும் Targeted Therapy (இலக்கு சிகிச்சை) புதிய நம்பிக்கையை அளிப்பதாக மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உலக புற்றுநோய் தினத்தை (பிப்.4) முன்னிட்டு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இந்த நவீன சிகிச்சை முறையில் துல்லியமான தாக்கம், குறைவான பக்கவிளைவுகள் மற்றும் உயர்ந்த உயிர்காக்கும் விகிதம் காணப்படுவதாக கூறப்பட்டது. வழக்கமான கீமோதெரபியுடன் ஒப்பிடும்போது, முதியவர்கள் மற்றும் குழந்தைகள் இச் சிகிச்சையை எளிதாக தாங்கிக்கொள்ள முடிகிறது என்றும் விளக்கினர்.

இரத்தப் புற்றுநோயியல் துறை தலைவர் டாக்டர் ஜி. காசி விஸ்வநாதன் கூறுகையில், “டார்கெட்டட் தெரபி மூலம் எங்கள் மையத்தில் சிகிச்சை பெற்ற பெரியவர்களில் பெரும்பாலோர் முழுமையாக குணமடைந்து வருகின்றனர். குழந்தைகளிலும் இந்த சிகிச்சை சிறந்த பலனை அளிக்கிறது” என்றார்.

குழந்தைகளுக்கான நிபுணர் டாக்டர் ஸி.வி. அன்னபூரணி, இனோடுசுமாப், போன்ற புதிய இலக்கு மருந்துகள் புற்றுநோய் செல்களை மட்டும் அடையாளம் கண்டு தாக்குவதால், குழந்தைகளுக்கு புதிய நம்பிக்கை கிடைத்துள்ளதாக தெரிவித்தார். டாக்டர் V. அனிதா இதுவரை 1,000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, சுமார் 80 சதவீதம் குழந்தைகள் குணமடைந்து வருவதாக கூறினார்.

தென் தமிழகத்தில் முதன்முறையாக 2015ம் ஆண்டு எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை (BMT) மையத்தை தொடங்கிய மீனாட்சி மிஷன் மருத்துவமனையில், இதுவரை 450க்கும் மேற்பட்ட மாற்று சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, சர்வதேச தரத்துடன் சுமார் 70 சதவீதம் வரை குணமடைதல் விகிதம் எட்டப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.



■ மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள்ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், எக்கட்டாம்பாளையம் ஊராட்சி, வாய்க்கால்புதூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை துவக்கி வைத்தார். உடன் மண்டல மேலாளர் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்) திருமதி. பானுமதி ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி.சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.





■ தேனிமாவட்டம் கம்பத்தில் அஇஅதிமுக சார்பாக பேரறிஞர் அண்ணாவின் 57வது நினைவுதினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மேற்கு மாவட்டசெயலாளர் STK ஜக்கையன் EXM-LA கழக அமைப்பு செயலாளர் தலைமை தாங்கினார்.மேலும் வடக்குநகர செயலாளர் கார்த்திகேயன் EXM.C மற்றும் தெற்கு நகர செயலாளர் கணபதி முன்னிலை வகித்தனர். உடன் கம்பம் வடக்கு, தெற்கு நகர நிர்வாகிகள், சார்பணி, கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக தொண்டர்கள் திரளாக கழந்துகொண்டனர்.



## புதிய சாலை மூன்றே மாதத்தில் சாலையில் ஏற்பட்ட பள்ளம் மாநகராட்சியின் அவல நிலை....????

கன்னியாகுமரி, பிப்.4-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 35 வது வார்டுக்கு உட்பட்ட ராமன் புதூர் சாலை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு போடப்பட்டது. தரம் இல்லாத பணியால் தற்போது சாலையில் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் கடமைக்கு வேலை செய்ததால் ஏற்பட்ட நிலைமை.... அரசின் பணம் வீணடிப்பு.. கவுன்சிலர் எந்த பணிகளையும் கண்டு கொள்வதில்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டு. ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்க மாநகராட்சிக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்



## ஒருதட்டு - ராஜதானிகோட்டையில் விவசாயிகளுக்கு பன்றி, மயில் சேத தடுப்பு பயிற்சி

நிலக்கோட்டை, பிப்.4-

நிலக்கோட்டை வட்டாரத்திற்குட்பட்ட ஒருதட்டு மற்றும் ராஜதானிகோட்டை கிராமங்களில், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறையில் பன்றி மற்றும் மயில்களால் ஏற்படும் பயிர்சேதங்களைத் தடுப்பது குறித்து பயிற்சி நடைபெற்றது. இதில் மதுரை வேளாண் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவி ஆர். பாலதர்ஷினி, விவசாயிகளுக்கு நேரடியாக வயல்வெளியில் செயல்முறை விளக்கப் பயிற்சி அளித்தார்.

பன்றிகளை விரட்ட ஜிழிகிஹி விரட்டி (ரூ.325) பயன்படுத்துவது, மனித முடிரூசல்பர்ரூபன்றி கொழுப்பு எண்ணெய் கலவையை துணியில் நனைத்து வைப்பது, பன்றியின் சாணத்தை எரித்து புகை விடுவது போன்ற உத்திகளை பின்பற்றலாம் என தெரிவித்தார். மயில்களைத் தடுக்கும் வகையில் விதைகளை வெளியில் தெரியாமல் மண்ணில் மூடுதல், பிரதிபலிப்பு நாடாக்கள் கட்டுதல், கட்டிடங்கள் மேல் பறவை கூர்முனை கொக்கிகள் அமைத்தல், சோளக்காட்டு பொம்மை, ஒலியெழுப்பும் கருவிகள், சூரிய வேலி அமைத்தல் உள்ளிட்ட முறைகள் குறித்து விளக்கினார்.

மேலும் அதிக வாசனை கொண்ட தாவரங்களான வெட்டிவேர், ஆமணக்கு, வண்ண பூக்கள் உடைய சூரியகாந்தி, சாமந்தி போன்றவற்றை பயிரிடுவதன் மூலம் பன்றி மற்றும் மயில் தாக்குதலைக் குறைக்கலாம் என தெரிவித்தார். இதுகுறித்த துண்டு பிரசுரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, அவர்களது வினாக்கள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.





■ சிவகங்கை மாவட்டம் மேலநெட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் நேற்று தமிழ்க்கூடல் விழா நடைபெற்றது. கணித ஆசிரியை இராமஜெய பிரியா வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் தலைமையாசிரியர் சோ பாலகிருஷ்ணன் தலைமையுரை ஆற்றினார். திருப்புவனம் நடுநிலைப்பள்ளி தமிழாசிரியர் வே தெய்வேந்திரன் " தமிழின் தொன்மை, தமிழின் இனிமை" குறித்து நகைச்சுவை கலந்த சிறப்புரையாற்றி மாணவர்களை மகிழ்வித்தார். கணித ஆசிரியை சரவணப்பிரியா நன்றியுரை வழங்கினார். ஆங்கில ஆசிரியை இரா திவ்யா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாட்டினை தமிழாசிரியை அ பாப்பாத்தி மற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர். இவ்விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டுவிக்கப்பட்டது.




## கன்னியாகுமரி மாவட்டம் தோவளை வட்டம் தாழக்குடி பேரூராட்சிக்குட்பட்ட தாழக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி மாவட்ட அளவில் சாதனை

கன்னியாகுமரி, பிப்.04-

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பாக நடைபெற்ற தமிழ் இலக்கியத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கான மாநில அளவிலான திருக்குறள் மாணவர் மாநாடு 20206ல் பங்கேற்ற மாணவி திவ்யபாரதி அவர்கள் (தாழக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி) வினாடி வினா போட்டியில் குமரி மாவட்டத்தில் முதலிடம் பெற்றுமைக்காக கிடைத்த சான்றிதழை பள்ளியின் தலைமை ஆசிரியர் தர்மேந்திரராஜ் அவர்களிடம் காட்டி வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் பெற்றார்

மேலும் வ.ஊ.சி நினைவு நாளை முன்னிட்டு மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சு போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி ராஜேஸ்வரி மாவட்ட அளவில் திறன் வளர்த்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் ராகுல் ஆகியோரையும் பாராட்டினார்

இந்த நிகழ்ச்சியில் தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவரும் கவுன்சிலர் ரோகினி அய்யப்பன்; தமிழாசிரியர் விமல்சங்கர்; ஆங்கில ஆசிரியர் கீதா மற்றும் பள்ளி உதவி தலைமை ஆசிரியர் பிந்து; ஓவியர் ஆசிரியர் மாலதி; உட்பட ஆசிரியர் பெரு மக்கள் மாணவிக்கு பாராட்டுகளையும் வாழ்த்துக ளையும் தெரிவித்தனர். தாழக்குடி பேரூராட்சி க்கும் பள்ளிக்கும் பெருமையை தேடித் தந்த மாணவி தலைமை யாசிரியர் உதவி தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் அனைவருக்கும் தாழக்குடி பேரூராட்சி பகுதி மக்கள் சார்பாக தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவரும் கவுன்சிலர் ரோகினி அய்யப்பன் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்

## பேரறிஞர் அண்ணா நினைவு நாள்: தி.க. சார்பில் மலர்மாலை அணிவிப்பு



காரைக்குடி, பிப்.04-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு, இன்று (பிப்- 03) காலை, மாவட்ட திராவிடர் கழகத்தின் சார்பில் அவரது சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது., இந்த நிகழ்வு ம.கு. வைகறை தலைமையில், மாவட்ட காப்பாளர் சாமி திராவிடமணி முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட தி.க. செயலாளர் சி. செல்வமணி, கழகச் சொற்பொழிவாளர் தி. என்னாரெசுபிராட்லா, மாவட்ட துணைச் செயலாளர் இ.ப. பழனிவேல், மாநகர தி.க. துணைச் செயலாளர் பழனிவேல்ராசன், அண்ணா தமிழ்க் கழக உறுப்பினர்கள் GTS. சத்தியமூர்த்தி, S. சையது உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



## காவேரிப்பட்டணத்தில் அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவு தினம் அனுசரிப்பு

கிருஷ்ணகிரி, பிப்.04-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணத்தில் அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினம் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி ஒன்றிய செயலாளர் பையூர் பெ.ரவி மற்றும் நகர செயலாளர் விமல் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினருமான கே.அசோக்குமார் கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். அண்ணாவின் சமூகநீதி, திராவிட இயக்க சிந்தனைகள், தமிழ் மொழி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் குறித்து அவர் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அதிமுக இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம்.சதீஷ்குமார், மாநில மகளிர் அணி துணை செயலாளர் பரிதா நவாப், ஊத்தங்கரை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோரஞ்சிதம் நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் ஒன்றிய அவைத் தலைவர் சுந்தர், ஒன்றிய துணை செயலாளர்கள் விக்ரம் குமார், சரவணன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர்கள் கேசவன், கணேசன், மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், முன்னாள் பால்வளத் தலைவர் குப்புசாமி, மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணைத் தலைவர் ஆறுமுகம், ஒன்றிய பாசறை செயலாளர் பெரியசாமி, மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் அசோக்குமார், மாவட்ட கலைப் பிரிவு செயலாளர் நாசன், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் சண்முகம், தர்மபுரி மண்டல அண்ணா தொழிற்சங்க தலைவர் முருகன் உள்ளிட்ட பல்வேறு சார்பு அமைப்பு நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை பின்பற்றி மக்கள் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றுவோம் என உறுதிமொழி ஏற்றுக் கொண்டு நிகழ்ச்சி நிறைவுபெற்றது.





## காவல் நிலையமா? அல்லது பழைய வாகனங்கள் விற்பனை கூடமா? கனகம்மாசத்திரம் காவல்தில் வாகனங்கள் குவிப்பால் பொதுமக்கள் அவதி

திருவள்ளூர், பிப்.04-

திருவள்ளூர் மாவட்டம், கனகம்மாசத்திரம் காவல் நிலைய வளாகம் முழுவதும் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் நீண்ட நாட்களாகக் குவிந்து கிடப்பதால், அது ஒரு காவல் நிலையமா அல்லது பழைய இரும்புக்கடை மண்டியா என்ற சந்தேகம் எழும் அளவிற்கு அவல நிலையில் காணப்படுகிறது.

வாகனக் குவியல்:

கனகம்மாசத்திரம் காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்ற வழக்குகள், சாலை விபத்துகள் மற்றும் உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்திற்காகக் காவல் துறையினரால் நூற்றுக்கணக்கான வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் இருசக்கர வாகனங்கள், ஆட்டோக்கள் மற்றும் கார்கள் அடங்கும். இவ்வாறு பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை அந்தந்த வழக்குகளின் விசாரணைக்குப் பிறகு உரியவர்களிடம் ஒப்படைக்கவோ அல்லது நீதிமன்ற உத்தரவுப்படி ஏலம் விடவோ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முட்புதர்கள் மண்டி கிடக்கும் வளாகம்:

ஆனால், கடந்த பல ஆண்டுகளாக இந்த வாகனங்கள் அப்புறப்படுத்தப்படாமல் காவல் நிலையத்தின் முன்புறமே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீண்ட நாட்களாக ஒரே இடத்தில் இருப்பதால், அந்த வாகனங்கள் அனைத்தும் வெயிலிலும் மழையிலும் நனைந்து துருப்பிடித்து வீணாகி வருகின்றன. மேலும், வாகனங்களைச் சுற்றி ஆள் உயரத்திற்கு முட்புதர்கள் மண்டிப் போயுள்ளன.

பொதுமக்கள் கோரிக்கை:

இதனால் காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களுக்குப் பெரும் அசௌகரியம் ஏற்படுவதுடன், அடர்ந்த புதர்களில் விஷப்பூச்சிகள் மற்றும் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "பார்ப்பதற்கு ஒரு சினிமா காட்சியில் வரும் பாழடைந்த கட்டிடம் போலக் காவல் நிலையம் காட்சியளிக்கிறது. எனவே, மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் இணைந்து, தேங்கிக் கிடக்கும் இந்த வாகனங்களை முறைப்படி ஏலம் விடவோ அல்லது இடமாற்றம் செய்யவோ உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 53வது வட்டத்தில் கிராம சபா கூட்டம்


தாம்பரம், பிப்.04-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 53வது வட்டத்தில் கிராம சபா கூட்டம் பழைய தாம்பரம் குளம் அருகில் கோன்கிருஷ்ணா பூங்காவில் மாமன்ற உறுப்பினர் டி.ஆர் கோபி அவர்கள் தலைமையில் தாம்பரம் மாநகராட்சி சுகாதாரத்துறை அதிகாரி செந்தில்குமார் அவர்கள் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் 53வது வார்டுக்கு உட்பட்ட நல சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்துகொண்டு கருத்துக்களை தெரிவித்தனர் கூட்டத்தில் அனைத்து கருத்துகளையும் நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்தனர்

அதேபோல் 55வது வார்டு பகுதியில் பகுதி சபா கூட்டம் மாமன்ற உறுப்பினர் புகழேந்தி தலைமையில் நடைபெற்றது இதில் பொதுமக்கள் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்







## கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் புதிய சாலை மூன்றே மாதத்தில் சாலையில் ஏற்பட்ட பள்ளம்

### மாநகராட்சியின் அவல நிலை....????

கன்னியாகுமரி, பிப்.04-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 35 வது வார்டுக்கு உட்பட்ட ராமன் புதூர் சாலை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு போடப்பட்டது. தரம் இல்லாத பணியால் தற்போது சாலையில் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் கடமைக்கு வேலை செய்ததால் ஏற்பட்ட நிலைமை.... அரசின் பணம் வீணடிப்பு.. கவுன்சிலர் எந்த பணிகளையும் கண்டு கொள்வதில்லை என பொதுமக்கள் குற்றச்சாட்டு. ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்க மாநகராட்சிக்கு மக்கள் கோரிக்கை

## விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்





விருதுநகர், பிப்.04-

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத்திறனாளிகள், நலிந்தோர் நல உதவித்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.

பின்னர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறையின் கீழ் இயங்கி வரும் விருதுநகர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கமானது, 2024- 2025 ஆம் நிதியாண்டில் சங்கத்திற்கு அதிக பால் வழங்கிய 116 உறுப்பினர்களுக்கு புரவு தள்ளுபடித்தொகை ரூ.18.85 இலட்சம் வழங்கிட அனுமதித்து முதற்கட்டமாக ரூ.12.57 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக சங்கத்திற்கு அதிக பால் வழங்கிய நபர்களுக்கு

மொத்தம் ரூ.6.28 இலட்சம் புரவு தள்ளுபடித்தொகை வழங்கும் பணிகளை மாவட்ட ஆட்சியர் காசோலைகள் வழங்கி தொடங்கி வைத்தார்

இக்கூட்டத்தில், தனித் துணை ஆட்சியர்(சமூக பாதுகாப்பு திட்டம்) கு.மோகனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி பிர்தௌஸ் பாத்திமா, துணைப் பதிவாளர் (பால்வளம்) கி.சம்பத், முதன்மைக்கல்வி அலுவலர் அரவிந்தன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## கிருஷ்ணகிரியில் திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவு தினம் அனுசரிப்பு - மதியழகன் எம்.எல்.ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப்.04-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு சென்ட்ரல் தியேட்டர் முதல் அண்ணா சிலை வரை, கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் மௌன ஊர்வலம் நடைபெற்றது.

தொடர்ந்து,கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, மாநில வர்த்தக அணி துணைச்செயலாளர்கள் சீனிவாசன், அன்பரசு, மாவட்ட பொருளாளர் கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தராஜ், சாவித்திரி கடலரசு மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், VCN மகேந்திரன், தனசேகரன், நாராயணன், ரஜினி செல்வம், செந்தில், குமரேசன், எக்கூர் செல்வம், மாவட்ட தொழிலாளர் அணி துணைத்தலைவர் செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி செயலாளர் டிசிஆர் தினேஷ் ராஜன், காவேரிப்பட்டணம் நகர செயலாளர் பாபு உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் இராஜக்கமங்கலம் அளத்தங்கரை அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ம் வகுப்பு பயிலும் மாணவ,மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் இலவச மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டியினை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் . சற்குரு கண்ணன் அணி நிர்வாகிகள் .எடின்பிரேம் டேனியல் .முருகேசன்,.ராஜேஷ் ரெத்தினமணி தி மு க நிர்வாகிகள் .கிருஷ்ணன், .மணிகண்டன், .மாதவன், .பாபு, .லிங்கம், மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரிய பெருமக்கள் மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தேனியில் தானம் அறக்கட்டளை சார்பில் பேரணியை மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் துவக்கி வைத்தார்

தேனி, பிப்.04-

தானம் அறக்கட்டளை சார்பில் "நிலைத்த நிதி உள்ளடக்கம் "எனும் தலைப்பில் வாக்கத்தான் 2026 பேரணியை தேனி பழைய பேருந்து நிலையம் நேரு சிலை அருகில் மாவட்ட ஆட்சியர் ரஞ் ஜீத் சிங். தலைமை தாங்கி துவக்கி வைத்தார். தானம் அறக்கட்டளை மண்டல மேலாளர் வித்யா முன்னிலை வகித்தார்.இந்த பேரணியானது நேரு சிலை முதல் கான்வென்ட் அருகிலுள்ள வேலுச்சாமி திருமண மண்டபம் வரை நடைபெற்றது. அதன் பின்பு மகளிர் சுய உதவி குழுக்களிடையே சேமிப்பு,கடன் பெறுதல், ஒய்வூதியம், காப்பீடு, டிஜிட்டல் நிதி கல்வியறிவு உள்பட கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கௌமாரியம்மன் பேக்கரி உரிமையாளர் சுதாகர்,தேனி கனரா வங்கி உதவி பொது மேலாளர் ராஜேஷ் குமார் தாஸ்,சுகம் மருத்துவமனை மருத்துவர் ஜெயலட்சுமி,தேனி காவல் நிலைய ஆய்வாளர் ராமலட்சுமி,தேனி ரோட்டரி கிளப் தலைவர் கயல்விழி ரமேஷ்,பெரியகுளம் துணை காவல் ஆய்வாளர் ராஜமாணிக்கம், உத்தமபாளையம் உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவன முதன்மை செயல் அலுவலர் ராமசாமி,களஞ்சிய வட்டார பணியாளர்கள்,பரஸ்பர வட்டார பணியாளர்கள்,சுகம் வட்டார பணியாளர்கள்,அரசு சாரா நிறுவனங்கள்,மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்பட சுமார் 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டினம் நகர திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவு தினம் அனுசரிப்பு

காவேரிப்பட்டினம், பிப்.04-

காவேரிப்பட்டினம் நகர திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

நகர செயலாளர் ஜே.கே.எஸ். பாபு, ஒன்றிய செயலாளர் சரவணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்தேங்காய் சுப்பிரமணி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே வி எஸ் சீனிவாசன், மாவட்ட தொழிலாளர் அணி துணைத்தலைவர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். காவேரிப்பட்டினம் பழைய பேரூராட்சி அலுவலகம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



இதனைத் தொடர்ந்து, "அண்ணா வழியில் அயராது உழைப்போம், மக்களிடம் செல்வோம், களம் 2026இல் உறுதியாக வெல்வோம்" என்ற முழக்கத்துடன் கட்சித் தொண்டர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கிய ஐம்பெரும் உறுதிமொழிகளை ஏற்று, வரவுள்ள 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு களப்பணிகளுக்கு முழு வீச்சில் ஆயத்தமாகும் தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நகர செயலாளர் ஜே.கே.எஸ். சாஜித், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன்,மாவட்ட பிரதிநிதி இளங்கோவன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், பொறுப் பாளர்கள் மற்றும் ஏராளமான திமுக தொண்டர்கள் கலந்து கொண்டு அண்ணா நினைவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# தேன்கனிக்கோட்டையில் ரூ.1.01 கோடியில் தார், சிமெண்ட் சாலை பணிகள் தொடக்கம்

கிருஷ்ணகிரி, பிப்.04-

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை தேர்வுநிலைப் பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், 2025ஞீ2026 ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1 கோடியே 1 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கான பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த பணிகளை மாவட்ட கலெக்டர் தினேஷ் குமார் தலைமையில், மாண்புமிகு தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி அவர்கள் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், தளி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர்.

மேலும் அரசு அலுவலர்கள், திமுக பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்த சாலை பணிகள் நிறைவடைந்தால், தேன்கனிக்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து வசதி மேம்படுவதுடன், பொதுமக்களின் அன்றாட பயணமும் எளிதாகும் என தெரிவிக்கப்பட்டது.

## மக்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் சமூக ஆர்வலர் அமைப்புகளின் கூட்டமைப்பு சார்பில் நிலவும்

# நிர்வாக குளறுபடிகளை மக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையிலும், நூதனமான, அமைதியான, சட்டப்பூர்வ போராட்டமாக எருமையிடம் மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது

கூடுவாஞ்சேரி, பிப்.04-

செங்கல்பட்டு மாவட்டம் - வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் முறைகேடான நிர்வாக செயல்பாடுகளை வெளிக்கொணரும் நோக்கில், தகவல் பெறும் உரிமைச் சட்டம் (RTI Act) கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், பொது தகவல் அலுவலர் (PIO) மேல்முறையீட்டு அலுவலர் (FAA) ஆகியோர் சட்டப்படி தகவல் வழங்க மறுத்தும், RTI சட்டத்தின் அடிப்படை விதியான கள ஆய்வு பதிவேடு பார்வை செய்ய அனுமதி மறுத்தும் செயல்பட்டு வருகின்றனர்.

இந்த சட்ட விரோத செயல்களை கண்டித்தும், வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நிலவும் நிர்வாக குளறுபடிகளை மக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையிலும், நூதனமான, அமைதியான, சட்டப்பூர்வ போராட்டமாக எருமை யிடம் மனு கொடுக்கும் போராட்டம்" இன்று நடத்தப்பட்டது.

இந்த போராட்டத்தின் தூண்டுதல் மற்றும் நேரடி காரணங்கள்:



வண்டலூர் வட்டாட்சியர் வழங்கிய போலி பட்டா நில அளவை சான்று ஆவணம் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வட்டாட்சியர் வழங்கியதாக கூறப்படும் தகவல் வழங்க மறுத்ததும் மற்றும் இவர்களின் தூண்டுதலின் பெயரில் வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் காணொளி காட்சி புகைப்படம் எடுத்ததாக காவல்துறையிடம் கொடுக்கப்பட்ட பொய் புகார் ஆகியவை ஆகும். இதனை உறுதி செய்யும் ஆவண ஆதாரங்கள் முழுமையாக உள்ளன.

மேற்கண்ட அனைத்து ஆதார ஆவணங்களும்:

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சம்பந்த ப்பட்ட காவல் துறை ஆகிய இடங்களில் ஏற்கனவே சமர்ப்பிக் கப்பட்டுள்ளன.

இந்த சட்டப்பூர்வ நூதன போராட்டம், மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில், மாநில பொதுச் செயலாளர் டாக்டர் தி.கார்த்திக் கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இந்த போராட்டத்தில் பங்கேற்ற சமூக அமைப்புகள் - நிர்வாகிகள்:

மூத்த குடிமக்கள் நல சங்க தலைவர் மீனாட்சி சுந்தரம், பல்லாவரம் 13வது குடியிருப்பு நல சங்க தலைவர் எஸ்.பி.காந்தி சாலை போக்குவரத்து ஆக்கிரமிப்பு எதிர்ப்பாளர் பக்தவச்சலம், மக்களுக்கான மக்கள் இயக்கம், கொள்கை பரப்பு செயலாளர் முகுந்தராவ், மக்களுக்கான மக்கள் இயக்கம் மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் துளசிதரன், ரியாஸ் அகமது, மாநில IT Wing துணை ஒருங்கிணைப்பாளர்,

பத்து ரூபாய் இயக்கம், மாவட்ட செயலாளர் ஜெனிதர் ராஜா, முஸ்லிம் தவித் ஜமாத் தலைவர் மற்றும் மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் மாநில துணை ஒருங்கிணைப்பாளர் குலாம் முகமது, விழுப்புரம் மாவட்ட துணை அமைப்பாளர் தங்கராஜ், பம்மல் கிருஷ்ணன், வண்டலூர் ஹரி கிருஷ்ணன், மேலும், சமூக ஆர்வலர்கள் அமைப்புகளின் கூட்டமைப்பு மற்றும் தாம்பரம் மாநகர மக்கள் நல சங்கங்களின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைப்பிலும் இந்த போராட்டம் நடைபெற்றது இதில் கோரிக்கையாக வைக்கப்பட்ட மக்களின் முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கும்,

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் ஆகியோரின் உடனடி கவனத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது RTI சட்டம் மீறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும், போலி பட்டா விவகாரத்தில் முழுமையான விசாரணை நடத்தவும் மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில் வலியுறுத்துகிறது.



# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வெளியிட்ட செய்திக்குறிப்பு

சிவகங்கை, பிப்.04-

சிவகங்கை மாவட்டத்தில் 30.1.2026 ஆம் தேதி வரை நேரடியாகவும், இணையதளம் வாயிலாகவும் புதிதாக வாக்காளர்களாக சேர்க்க 28,007 மனுக்களும், பெயர் நீக்கம் செய்ய 2,221 மனுக்களும், வாக்காளர் விபரங்களை திருத்தம் செய்யக்கோரி 24,346 மனுக்களும், வெளிநாடு வாழ் வாக்காளர்களை பட்டியலில் சேர்க்க 17 விண்ணப்பங்களும் என ஆக மொத்தம் 54,591 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அந்தந்த வாக்காளர் பதிவு அலுவலர்களால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதனைத்தொடர்ந்து, மேற்படி விண்ணப்பங்களின் பரிசீலனைக்குப் பின்னர், 17.2.2026 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீட்டுக்குப் பின்னரும், பொதுமக்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, பெயர் நீக்கம் செய்ய மற்றும் திருத்தம் செய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்படும் வேட்புமனு தாக்கல் செய்யப்படவுள்ள 10 நாட்களுக்கு முன்னர் வரை, வாக்காளர்கள் தொடர்ச்சியாக தங்களது விண்ணப்பங்களை அளிக்கலாம். மேலும், தேர்தல் நடைவடிக்கைகளுக்குப் பின்னர் தொடர்ச்சியாவும் பொதுமக்கள் தங்களது விண்ணப்பங்களை அளிக்கலாம்.

இவ்வாறாக பெறப்படும் தகுதியுள்ள அனைத்து மனுக்களும் பரிசீலனை செய்யப்பட்டு, ஒவ்வொரு காலாண்டிலும் வாக்காளர் பட்டியலுக்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



# பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அமைதி ஊர்வலம்

திண்டுக்கல், பிப்.04-

திண்டுக்கல் மாவட்ட திமுக சார்பில் அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில் மணிக்கூண்டில் இருந்து அமைதி பேரணியாக சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் திமுக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர் ராஜப்பா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினம் கன்னியாகுமரி நகர திமுக சார்பில் கடைபிடிக்கப்பட்டது

கன்னியாகுமரி, பிப்.04-

பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினம் கன்னியாகுமரி நகர திமுக சார்பில் கடைபிடிக்கப்பட்டது. கன்னியாகுமரி பழைய பஸ்நிலையம் அருகே அமைந்துள்ள அண்ணா முழு உருவச்சிலைக்கு நகராட்சி தலைவர் குமரி ஸ்டீபன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி கவுன்சிலர்கள் எம்.பூலோகராஜா, ஆட்லின், இக்பால், ராயப்பன், முன்னாள் கவுன்சிலர் மெல்வின், மாவட்ட நிர்வாகிகள் டி.அரிகிருஷ்ணபெருமாள், எஸ்.அன்பழகன், எம்.ஹெச்.நிசார், புஷ்பராஜ், பேரூர் நிர்வாகிகள் சகாய ஆன்றனி, பி.ஆனந்த், ரூபின், சின்னமுட்டம் ஷ்யாம், ரஞ்சித்குமார், நாஞ்சில் மைக்கேல், வழக்கறிஞர் ஷேக், ஆன்சலாம், சார்லஸ், செந்தில் மற்றும் வழக்கறிஞர் டி.பாலகிருஷ்ணன்,



பீட்டர், அருண் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அண்ணாவின் உருவபட்டத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தென்குமரி கல்விக்கழக செயலாளர் பி.டி.செல்வகுமார் கூறியதாவது, நவீன தமிழகத்தை உருவாக்க முயற்சி செய்தவர் பேரறிஞர் அண்ணா. இன்றைக்கு அவரது கனவை நனவாக்கும் வகையில் மக்கள் வளர்ச்சி ஒன்றையே லட்சியமாக கொண்டு தி மு க ஆட்சி செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழி நடப்போம் என தெரிவித்தார்.



# கிருஷ்ணகிரி நகர அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினம் அனுசரிப்பு அசோக்குமார் எம் எல் ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஜன.04-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு அதிமுக நகர செயலாளர் கேசவன் தலைமையில், கிருஷ்ணகிரி ராசு வீதியில் அமைந்துள்ள அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு கிழக்கு மாவட்ட செயலா ளரும், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பின ருமான கே. அசோக் குமார் மலர் மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன், மாநில மகளிர் அணி துணை செயலாளர் பரிதா நவாப், ஒன்றிய செயலாளர் கன்னியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோரஞ்சிதம் நாகராஜ், முன்னாள் ஆவின் தலைவர் தென்னரசு,அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி, மாவட்ட சிறுபான்மை பிரிவு மக்பூல், மாவட்ட இளைஞரணி செயலாளர் கார்த்திக்,மாவட்ட மகளிர் அணி செயலாளர் சுகந்தி மாது, முன்னாள் இளைஞர் அணி நகர செயலாளர் சரவணன், நகர துணைச் செயலாளர் குரு, ஐடி விங் வேலன் உட்பட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாவட்டம், பாப்பிஸ் ஹோட்டல் அரங்கத்தில் “என் ஊர் என் கனவு” 2030 தொலைநோக்கு வியூகம் மற்றும் திட்ட ஆவணம் தயாரித்தல் தொடர்பாக நடைபெறும் சிறப்பு கருத்தரங்கினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் துவக்கி வைத்தார். மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., ,சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் , பத்மஸ்ரீ பேராசிரியர் சாலமன் பாப்பையா , பேராசிரியர் பர்வீன் சுல்தானா , அக்ரி மற்றும் அனைத்து தொழில் வர்த்தக சங்கம் தலைவர் ரத்தினவேல் , KGS ஸ்கேன் மருத்துவர் வெங்கடேசன் ,ப்ரீத்தி மருத்துவமனை மருத்துவர் சிவக்குமார் ஆகியோர் உடன் உள்ளார்.

## ரயில்வே தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தி மானாமதுரையில் SRMU சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

மானாமதுரை, பிப்.04-

தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் (SRMU) டிராபிக் கிளை சார்பில், அகில இந்திய கோரிக்கை நாளை முன்னிட்டு ரயில்வே தொழிலாளர்களின் பல்வேறு நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி மானாமதுரை ரயில் நிலையம் முன்பாக இன்று எழுச்சியான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.






முக்கிய கோரிக்கைகள்:

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தொழிலாளர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து முழக்கமிட்டனர்:

* 8வது ஊதியக் குழுவை உடனடியாக அமைத்திட வேண்டும்.

* புதிய ஓய்வூதியத் திட்டத்தைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) மீண்டும் அமல்படுத்த வேண்டும்.

* ரயில்வேயில் காலியாக உள்ள 2.5 லட்சம் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

* பணிச்சுமையைக் குறைக்கும் வகையில் லோகோ பைலட்டுகள் மற்றும் பிற பிரிவினருக்கு 8 மணி நேர வேலை முறையை உறுதி செய்ய வேண்டும்.

* பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு மற்றும் இதர விடுப்பு சலுகைகளை முறையாக வழங்கிட வேண்டும்.

தலைமை மற்றும் பங்கேற்பு:

இந்தக் கூட்டத்திற்கு கிளைத் தலைவர் G. சிவகுமார் தலைமை வகித்து ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைத்தார். கிளைச் செயலாளர் P. பாலமுருகன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளர்களாக உதவி கோட்டச் செயலாளர்கள் P. சீதாராமன் மற்றும் K. விஜயேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கைகளின் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினர். மேலும், பொருளாளர் M. சங்கரதாஸ், உதவித் தலைவர் M. இருளப்பன், கிளை நிர்வாகிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட ரயில்வே ஊழியர்கள், பெண் தொழிலாளர்கள் திரளாகப் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

முடிவில், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காவிட்டால் போராட்டங்கள் தீவிரப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.



■ கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் கீதா மற்றும் தலைமை காவலர் டேவிட் ஜான், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 46வது தேசிய மாஸ்டர்ஸ் அத்லெடிக் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் வென்றனர். இதில் கீதா இரண்டு தங்கமும் ஒரு வெள்ளியும், டேவிட் ஜான் ஒரு வெண்கலமும் பெற்றனர். இவர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.ஆர்.ஸ்டாலின் பாராட்டினார்.



## பேரறிஞர் அண்ணா 57வது நினைவு நாளை முன்னிட்டு மலர் தூவி மரியாதை

குரோம்பேட்டை, பிப்.04-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் குரோம்பேட்டை பேருந்து நிலைய அருகே பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையில் அண்ணா அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் 2வது மண்டல குழு தலை வரும் பகுதி கழக செயலாளருமான இ.ஜோசப் அண்ணாதுரை, தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், மாவட்ட பிரதிநிதி ரமேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜானகிராமன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி ஆகியோர் உடன் இருந்தனர்

## தாட்கோ சிறப்பு திட்டத்தை உடனடியாக அமல்படுத்தக் கோரிக்கை: 124 ஆதிதிராவிடர் விவசாயிகள் காத்திருப்பு - அரசு கவனம் தேவை

ராமநாதபுரம், பிப்.04-

தாட்கோ சிறப்பு திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி, கடலாடி மற்றும் கீழக்கரை தாலுகாக்களைச் சேர்ந்த ஆதிதிராவிடர் விவசாய குடிமக்களுக்கு ஆழ்துளை கிணறுகள் அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி எங்கள் சங்கம் நீண்ட காலமாக தொடர்ந்து அரசிடம் விண்ணப்பித்து வருகிறது.



இதற்கு முன்னதாக 2009ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் ஆட்சிக்காலத்தில் 43 ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு தாட்கோ சிறப்பு திட்டத்தின் கீழ் ஆழ்துளை கிணறுகள் வழங்கப்பட்டு, அவர்களின் விவசாய வாழ்க்கை பாதுகாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று தற்போது வழங்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், அரசு செயலாளர் அவர்கள் தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு பரிந்துரை செய்து, அதன் தொடர்ச்சியாக மாவட்ட தாட்கோ மேலாளர் மூலம் கள ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது.

அதன்படி 124 ஆதிதிராவிடர் விவசாயிகள் பரிந்துரைக்கப்பட்டு, ஆய்வு அறிக்கையும் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நீண்ட காலம் கடந்தும் இதுவரை எந்தவிதமான திட்ட அமலாக்க நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், மழை சார்ந்த விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள ஆதிதிராவிடர் விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, ஆய்வு முடிக்கப்பட்ட 124 பயனாளிகளுக்கு தாட்கோ சிறப்பு திட்டத்தின் கீழ் உடனடியாக ஆழ்துளை கிணறுகள் அமைத்துத் தர வேண்டும் என்றும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் ஆதிதிராவிடர் ஆழ்துளை கிணறுகள் விவசாயிகள் நலச்சங்கம் நிர்வாகிகள் மனு அளித்தனர்.

## ராஜபாளையம் வழியாகச் செல்லும் ரயில் போக்குவரத்தில் மாற்றம்: முக்கிய அறிவிப்பு

ராஜபாளையம், பிப்.04-

ரயில்வே பராமரிப்புப் பணிகள் காரணமாக ராஜபாளையம் வழியாகச் செல்லும் சில முக்கிய ரயில்களின் போக்குவரத்து பாதையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

ரயில் போக்குவரத்து மாற்றங்கள் குறித்த விவரங்கள்:

* வண்டி எண் 16848 (செங்கோட்டை மயிலாடுதுறை விரைவு ரயில்):

இந்த ரயில் பிப்ரவரி 4, 11, 18, 25 ஆகிய தேதிகளில் மட்டும் திருமங்கலம், மதுரை, திண்டுக்கல் வழியாக இயக்கப்படும். மற்ற நாட்களில் வழக்கம்போல அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை, தேவகோட்டை ரோடு, காரைக்குடி, புதுக்கோட்டை மற்றும் கீரனூர் வழியாக இயங்கும்.

* வண்டி எண் 16847 (மயிலாடுதுறை செங்கோட்டை விரைவு ரயில்):

இந்த ரயில் பிப்ரவரி 8ஆம் தேதி மட்டும் மாற்றுப் பாதையில் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

* வண்டி எண் 56772 (செங்கோட்டை மதுரை பாசஞ்சர் ரயில்):

இந்த ரயில் பிப்ரவரி 20, 21, 22, 24, 25, 26 ஆகிய தேதிகளில் மதுரை கிழக்கு, மானாமதுரை, அருப்புக்கோட்டை வழியாக இயக்கப்படும்.

* வண்டி எண் 16327 (மதுரை குருவாயூர் விரைவு ரயில்):

இந்த ரயில் பிப்ரவரி 21 மற்றும் 25 ஆகிய தேதிகளில் மானாமதுரை, அருப்புக்கோட்டை வழியாக இயக்கப்படும்.

பயணிகள் இந்த மாற்றங்களைக் கவனித்து தங்கள் பயணத்தைத் திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.




■ வேலூர் மாவட்டம் பழைய மாநகராட்சி அருகே அறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு தே.மு.தி.க கட்சி சார்பாக பகுதி செயலாளர் செல்வம் தலைமையில் நடைபெற்றது அறிஞர் அண்ணா உறவை சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர் சீனிவாசன் மாலை அணிவித்தார், ஜெகதீசன்,சங்கர், தயாளன். ரசூல் முரளி, காசி, சரவணன், மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ நாகர்கோவில் மாநகராட்சி 39வது வார்டுக்குட்பட்ட இளங்கடை வடக்கு அரசு தொடக்க பள்ளியில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கழிவறை அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்.உடன் துணை மேயர் .மேரி பிரின்ஸிலதா மாமன்ற உறுப்பினர் பாத்திமா ரிஸ்வானா. பகுதி செயலாளர் .துரை. தி மு க நிர்வாகிகள் ஹிதயாத், .ஆறுமுகம் சிவராமலிங்கம் மற்றும் ஆசிரியர் பெருமக்கள்,மாணவ மாணவிகள்,பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.94 திருநகர் அண்ணா பூங்கா வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அறிவியல் பூங்காவினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பார்வையிட்டார் அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் ஸ்வேதா,சிவா, ரவிச்சந்திரன், விஜயா, இந்திராகாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



## கீழக்கரை நகராட்சி அலுவலக இடிப்பு முயற்சி - பாதுமக்கள் கடும் எதிர்ப்பு

ராமநாதபுரம், பிப்.04-

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சி அலுவலகத்தை இடித்து புதிதாக கட்ட 4.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பொதுமக்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

நகராட்சியின் பின்புற காலியிடத்தில் விரிவாக்கம் செய்யப்படும் என கூறப்பட்ட நிலையில், தற்போதுள்ள கட்டிடத்தை முழுமையாக இடிக்க தீர்மானித்திருப்பது மக்கள் வரிப்பணத்தை வீணடிக்கும் செயல் என சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர். நகராட்சி கூட்டத்தில் இந்த முடிவுக்கு எதிராக 19வது வார்டு கவுன்சிலர் சப்ரஸ் நவாஸ் மற்றும் 20வது வார்டு கவுன்சிலர் ஷேக் உசைன் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையே, மீன் மார்க்கெட், ஆதார் சேவை மையம், பொது நூலகம், விளையாட்டு மைதானம், பாதாள சாக்கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

அவசியமான அடிப்படை வசதிகளை நிறைவேற்றாமல், அலுவலக கட்டிடம் இடிப்பதற்கு முன்னுரிமை வழங்குவது தவறு எனக் கூறி, இந்த முடிவை உடனடியாக கைவிட அரசு தலையிட வேண்டும் என்றும், இல்லையெனில் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் பொதுமக்கள் எச்சரித்துள்ளனர்.



■ கன்னியாகுமரி மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு குமரி கிழக்கு மாவட்ட தி மு க செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேரணியினை திமுக மாவட்ட தலைமை. அலுவலகம், ஒழுகினசேரியில் தொடங்கி வடசேரியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி நிறைவு செய்தார். மாநில மாவட்ட மாநகர ஒன்றிய பகுதி நகர பேரூர் தி மு க நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் அமைதி பேரணியில் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161